1975 ஏப்ரல் 15]

Branch Channel at Kalluvilai.

*665 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal under the consideration of the Government to provide a branch channel at Kalluvilai in Killiyoor village, Kanyakumari district under the Chittar-Pattanamkal Scheme?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்தக் கல்லுவிளைக்கு வாய்க்கால் வெட்டுவது அந்தப் பகுதிக்குத் தேவை. அது வறட்சி மிகுந்த பகுதியாக இருக்கிறது. அந்தப் பகுதியிலே இதை விஸ்தரித்துக் கொடுத்தால் அது சிறப்பாக இருக்கும். ஆதலால், அதைப் புனர் பரிசீலனை செய்ய அரசாங்கம் வேண்டிய ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, வாய்க்கால் வெட்டினல், வாய்க்கால் பாயவேண்டிய பூமி, உயரமாக இருக்கிற காரணத்தால், நீர் பாய முடியவில்லை. ஆகவே, தடுப்புச் சுவர் கட்ட வேண்டியிருக்கிறது. தடுப்புச் சுவர் கட்டி தண்ணீர் ஏற்ற வேண்டியிருக்கும். அதற்காகச் செலவு அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருந்தாலும், பட்டணங்கால் திட்டம் தனது 15,000 ஏக்கர் இலக்கை அடைந்து விட்ட காரணத்தால் இந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது.

திரு ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இலக்கு 15,000 ஏக்கராக இருக்கிறது. ஆனால், தண்ணீர்போய்ச் சேருவதில்லை. டெய்ல் எண்டில் ஒழுங்காகத் தண்ணீர்விட வழியில்லாமலிருக்கிறது. காரணம் குலசேகரம் பக்கத்திலே இருக்கிற ஃப்ளும் குறைவாக இருக்கிறது. ஃப்ளும் அதிகமாக இருந்தால் தான் தண்ணீர் போய்ச் சேர முடியும். ஆகவே, ஃப்ளும்மை விஸ்தரிக்கச் செய்தோ, அல்லது உயரத்தைக் கூட்டினலோ தான் தண்ணீர் வரும். அதைச் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவரவர்களே மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கிறேன்.

விலைவாசிகள் மீது கண்காணிப்பு.

* 666 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரெவின்யூ டிவிஷனல், அதிகாரிகள், உதவி ஆட்சியர்கள் அளவில் விலை ஏற்றத்தினைக் கண்காணித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள அரசு ஆணை ஏதேனும் பிறப்பித்துள்ளதா?

(இ) ஆமெனில், அதிகாரிகளால் அது எவ்வாறு செயல் படுத்தப்படுகிறது?

மாண்புமிகு திரு செ. மாதவன்: (அ) & (இ) உரிமம் வழங்கு அதிகாரிகளாகக் கோட்டாட்சித் தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். உணவுக் கட்டுப்பாடு விதிகளைச் செயல்படுத்தும் பொறுப்பும் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திரு என். கிட்டப்பா : தலைவரவர்களே, கொள்ளை இலாபம் வைத்து விற்பவர்களையும் பதுக்கல்காரர்களையும் கண்டுபிடித்து, உடனடியாக நடவடிக்கை எடுக்க வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு உதவியாகத் தனி போலீஸ் படை அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உணவுப் பொருள்கள் கட்டுப்பாடு சம்பந்தமான சட்டங்களை மீறுவோர்கள் மீது நமது ஃபுட் செல்லிலுள்ள போலீசார் கண்காணித்து நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, நாட்டிலே மொத்த விலைவாசி குறைந்திருக்கும்போது சில்லறை விலை குறையவில்லை யென்று சொல்லப்படுகிறது. அப்படியிருக்கும்போது, மொத்த விலையும் சில்லறை விலையும் இம்மாதிரி இருக்க வேண்டுமென்ற முறையை அமுலாக்க, வாங்கி உபயோகிப்பவர்களுக்கு நியாயமாகக் கிடைக்க என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன? இதைச் சரியான முறையில் அமுலாக்க அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மொத்த விலை குறையுமானால் நிச்சயம் சில்லறை விலையும் குறைந்தாக வேண்டும். அதிலே எந்தவிதமான கஷ்டமும் இருக்காது என்றுதான் நினைக்கிறேன். ஆனால், திட்டமிட்டு சில இடங்களிலே கூடுதல் விலையிலே விற்பார்களானால் அதை அங்கங்கே அதிகாரிகள் கண்காணிப்பார்கள். அந்த முயற்சியிலேதான் அதிகாரிகள் செயல்பட முடியும்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, when there is practically no price control on various essential items, what can the Government Officers do whenever they find things selling at vrye high prices and profiteering is going on? what steps have the Government taken to prevent it?

1975 ஏப்ரல் 15]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விலையைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் இல்லையென்பது சரியான வாதமாகும் அதுதான் இப்பொழுதுள்ள பிரச்னையாக இருக்கிறது. உற்பத்தி ஸ்தானத்திலிருந்து விநியோகிக்கின்ற இடம் வரை விலையைச் சீராக்குகின்ற ஒரு பொருளாதாரக் கொள்கையின் மூலமாகத் தான் இதைக் கட்டுப்படுத்த முடியும். இப்பொழுது நாம் பின்பற்றுகின்ற முயற்சியெல்லாம் அங்கங்குள்ள வியாபாரிகள் கணக்கிலே காட்டாது கொள்ளை இலாபம் சம்பாதிப்பதற்கு முயற்சி எடுப்பார்களானல் அந்தப் பதுக்கலைப் பிடிப்பதன்மூலமாக ஓரளவுக் கட்டுப்படுத்த முடிகிறது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, உணவுப் பொருள் விலையைக் குறைக்க வேண்டுமென்று சொன்னல், நாம் நெல்லைக் கொள்முதல் செய்தாக வேண்டும். அப்படி நெல்லைக் கொள்முதல் செய்கின்ற நேரத்தில் சில அதிகாரிகள் மக்களிடத்திலே தவருக நடந்து கொள்கிருர்கள். உதாரணத்திற்கு தஞ்சை மாவட்டத்திலே நாச்சியார் கோவிலில் அதிகாரிகள் தவருன முறையில் அங்கேயிருந்த நெல்லை எடுத்துக் கொண்ட காரணத்தாலே, புத்தாண்டு முதற்கொண்டு அந்த ஆலயமும் மூடப்படுவதாகவும், அனதைகள் இல்லமும் மூடப்படுவதாகவும், அதனல் அங்கு அனதைகளும் மற்றவர்களும் கஷ்டப்படுவதாகவும் செய்தி வந்திருக்கிறதே, அது உண்மையா? ஆமெனில், அப்படித் தவருக நடந்த அதிகாரிகள் மீது சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரிசி விலையைக் கட்டுப்படுத்துவதற்காக ஓரளவுக்கு நாம் குறைந்த விலையிலே கொள்முதல் செய்து, நியாய விலைக் கடைகள் மூலமாக விநியோகிக்கின்ருேம். அந்த அளவுக்கு வெளிச் சந்தை விலையைக் கட்டுப்படுத்த முடிகிறது. கொள்முதல் செய்யும்போது அங்கங்கே சில தகராறுகள் நடைபெறுகின்றன.

ஏற்கனவே, கேள்வி கேட்டபோது அதைப்பற்றி நான் சொன்னேன், மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் உடனடியாக விசாரிக்க வேண்டுமென்று நாம் உத்தரவு போட்டோம் என்று. அவர்கள், இன்னும் விசாரித்து அறிக்கையைத் தரவில்லை. இன்று காலையிலே கூட, மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொலைபேசியிலே பேசினேன். உடனடியாக அறிக்கையை சமர்ப்பிப்பதாகச் சொன்னர்கள். இதற்கிடையிலே மறுபடியும் இன்றைக்கு வந்த செய்தியைத்தான் அவர்கள் கேட்கிருர்கள் என்று நினைக்கிறேன்.

இன்று காலையிலே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அந்தக் கோயிலினுடைய நிர்வாகஸ்தரோடு, மானேஜிங் டிரஸ்டியோடு, தொலைபேசியிலே பேசினர்கள். நேற்று காலையிலே அப்படி ஒரு

[1975 ஏப்ரல் 15

நிகழ்ச்சி நடைபெற்றதாகவும், அதற்குப் பிறகு மாவட்ட மேல் மட்டத்திலேயுள்ளவர்கள் அவர்களோடு பேசி, மறுபடி பூஜைகள் நடப்பதாகவும், கோயிலை மூடவில்லை, அங்கேயுள்ள அனுதை இல்லத்தை மூடவில்லையென்ற செய்தியையும் மானேஜிங் டிரஸ்டியும் சொல்லியிருக்கிருர்கள். மாவட்ட ஆட்சித் தலைவரும் சொல்லியிருக்கிருர்கள். ஆனுல், முக்கியமான குற்றச் சாட்டு, இதுபோன்ற உணவுப் பொருள் கட்டுப்பாடு சட்டத்தை அமுல் நடத்துகிற அதிகாரி (டி.எஸ்.ஓ.), கோயிலுக்குப் பொது மக்கள் வாலண்டரியாகக் கொண்டுபோய் பூஜைக்காகக் கொடுத்த நெல்லையும் தடுத்தார் என்பதுதான். அது உண்மையாக இருக்கு மானுல், அப்படிப்பட்ட அதிகாரிகள் மீது கடுமையான நட வடிக்கையை எடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவ ரிடத்திலே சொல்லப்பட்டிருக்கிறது.

திரு கே. டி. கே. தங்கமணி: சார், அத்தியாவசியமான பொருள்களாக இருக்கக்கூடிய அரிசி, கோதுமை, எண்ணெய் போன்ற பொருள்கள் இருக்கின்றனவே, அவைகளுக்கு விலையை நிச்சயம் பண்ணி, இந்த விலையில்தான் விற்கவேண்டுமென்று, மாவட்டத்திற்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறதா ? அப்படி அனுப்பப்பட்டிருந்தால், அதை விரிவாக விளம்பரப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்த விலை நிர்ணயம் இல்லையென்றுதான் ஏற்கனவே சொன்னேன். சர்க்கரையைப் பற்றி சொன்னுர்கள். சர்க்கரையைப் பொறுத்த அளவுக்கு, ஒரு பகுதியைக் குறைந்த அளவுக்கு விற்க வேண்டுமென்பது மத்திய அரசாங்கத் திட்டம். இன்னெரு பகுதியை எந்த விலைக்கு வேண்டுமானுலும் விற்கலாம் என்பது மத்திய அரசாங்கத் திட்டம். இந்த இரட்டை முறைக் கொள்கையைக் கடைப் பிடிப்பதாலே, நாட்டிலே பதுக்கல், கள்ளச் சந்தை, விலை யேற்றம் ஆகியவை இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, நம்முடைய கொள்கையினுல்தான் அப்படிப்பட்ட விலை வாசி ஏற்றம் ஏற்படுகிறது. நம்முடைய கொள்கையிலே தெளிவு இருக்குமானுல் நிச்சயம் விலைவாசி ஏருது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, அத்தியா வசியப் பண்டங்கள் பல இடங்களிலும் தட்டுப்பாடாக இருக் கின்றன. ஆகவே, அதைக் கண்காணிக்கத் தனி செல் இருந்தா லும், எந்த முறையிலே பதுக்கல் கட்டுப்படுத்தப்படுகிறது? உதாரணமாக, எண்ணெய், சர்க்கரை போன்றவை பல இடங் களிலே கிடைக்கவில்லையே, அதற்காக என்ன ஏற்பாடு மாவட்ட ரீதியாக கையாளப்படுகிறது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப் பார்களா?

1975 ஏப்ரல் 15]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்த விலையையும் கட்டுப் படுத்திக் குறைக்கின்ற நிலையிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அந்த விலையைப் பொருளாதாரக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வர எந்தச் சட்டமும் உதவியாக இருப்பதாகத் தெரியவில்லை. உதாரணத்திற்கு எண்ணெயைப் பற்றி சொன்னார்கள். எண்ணெயைப் பொறுத்தவரை, அதிகமாக, தேவைக்குமேலே உற்பத்தியாவது தமிழ்நாட்டில்தான். ஆனால், அந்த எண்ணெய் வித்துக்கள் உட்பட எண்ணெயைப் பொருளாதாரக் கட்டுப் பாட்டுக்குக் கொண்டுவர நம்மால் முடியவில்லை. அகில இந்திய ரீதியிலே, நம்முடைய தேவைக்குப் போக, மிகுதி வெளி மாநிலத் திற்குப் போக வேண்டுமென்பது நம்முடைய கொள்கை. அதை யும் அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராகவில்லை. மகாராஷ்டி ரத்திலே, கடலை உட்பட பல பொருள்களுக்காகவுள்ள சந்தையை நம்மால் கட்டுப்படுத்த முடியவில்லை. அவர்களாலும் கட்டுப் படுத்த முடியவில்லை. அந்தச் சந்தையினுடைய இன்ஃப்ளே ஷன்படி, அங்கு என்னென்ன தவறுகள் ஏற்படுகின்றனவோ, அதனல் தமிழ்நாட்டு மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன்: சார், அமைச்சரவர்கள் பதில் சொல்கிற போது, நாச்சியார்கோவில் நிகழ்ச்சி பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து இன்னும் ரிப்போர்ட் வரவில்லை என்று கூறி னார்கள். இங்கே சட்டமன்றம் நடந்துகொண்டிருக்கிறபோது, இதுபோன்ற காரியங்களில் இவ்வளவு அக்கறைக் குறைவாக அதிகாரிகள் நடந்துகொள்ளும் நிலைமை இருப்பது அரசுக்குத் தெரியுமா? விரைவாக அந்த ரிப்போர்ட்டை வாங்கி, இங்கே சமர்ப்பிக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் எவ்வளவு துரிதமாக வேலை செய்கிறோம் என்பதை என்னுடைய பதிலில் இருந்தே உணர்ந்து இருக்கலாம். நானே தொலைபேசியில் பேசினேன். முதலமைச்சர் அவர்களும் தொலைபேசியில் பேசினார்கள். அங்கேயுள்ள கோவில் அதிகாரி வெளியூர் சென்றிருப்பதாகவும், அவர் வந்தபின்தான் விசாரணை செய்வது பொருத்தமாக இருக்கும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் கருதியிருக்கிறார்கள். எப்படியும் விரைவாக இன்று அல்லது நாளைக்குள் முடிவு எடுக்கவேண்டுமென்று சொல்லி யிருக்கிறோம்.

திரு. என். கே. பழனிசாமி : தகராறு வந்ததற்குக் காரணம பப்பர் ஸ்டாக் சர்ப்ளஸ் இருந்ததாகவும், ஏற்கனவே அந்தக் கோவிலுக்குத் தேவையான 6 மாத ஸ்டாக் இருந்ததாகவும் அதற்குமேல் இருப்பதை எடுக்கப்போனதற்குத்தான் அந்தப் போராட்டத்தை அவர்கள் செய்தார்கள் என்று சொல்லப்படு

[1975 ஏப்ரல் 15

கிறது. ஆகவே, அந்தக் கோவில் நிர்வாகிகளைக் கைது செய்தால் என்ன? அந்த டிரஸ்டிகளை அரெஸ்ட் செய்தால் என்ன? நாம் 4 இலட்சம் டன் கொள்முதல் செய்ய திட்டமிட்டு இருக்கிறபோது, இப்படி சர்க்கார் சிப்பந்தியைத் தடுத்து நிறுத்திய அந்த கோவில் நிர்வாகஸ்தர்களைக் கைது செய்தால் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படிக் கேட்பது சரியல்ல. கோவில் அதிகாரிகள் தவறு செய்ததாக ஊகித்துக் கொண்டு பேசுவது தவறு. இப்படி கோவிலுக்கு எதிராகப் பிரசாரம் செய்வது சரியல்ல. நம்முடைய வாதம், இன்னும் ஏராளமான நெல் வந்து இருக்க வேண்டும். ஒழுங்காக லெவி அவர்கள் அளிக்கவில்லை என்பதாகும். அங்கே அரசாங்கத்தின் சார்பாக எக்சிக்யூடிவ் ஆபீசர் இருக்கிருர். அவரைக் கட்டுப் படுத்துகிற அளவுக்கு அந்த மாவட்டத்திலேயே டிபுடி கமிஷனர் இருக்கிருர். அவருடைய அனுமதியைப் பெற்று இதைச் செய்து இருக்க வேண்டும். கோவில் நிர்வாகிகளாவது உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி இருக்க வேண்டும். கோவில் டிரஸ்டிகளைக் கைது செய்ய வேண்டுமென்று சொல்வது பத்தாம் பசலிக் கொள்கை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: சர்க்கார் இந்த சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் ஒரு குவின்டால் நெல்லுக்கு 105 ரூபாய் கொள்முதல் விலை கொடுக்கிருர்கள். ஆனல் விற்பனை செய்கிற போது ஒரு குவின்டால் ரூ. 136-க்கு விற்கிருர்கள். 105-க்கு வாங்கி 136-க்கு விற்பது கிட்டத்தட்ட 30 சதவீதம் லாபம் வைத்து விற்பது முறையா? ஏன் இந்த லாபத்தைக் குறைத்து குறைந்த விலைக்கு அரிசி வினியோகம் செய்ய முடியாதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஏற்கனவே இந்த மன்றத்தில் விரிவாக பதில் சொல்லப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ஆராய்ந்து சில கருத்துக்களைத் தருவார்களானல் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறேன். விற்கிற விலையையும் வாங்கிய விலையையும் கணக்கில் எடுத்துக் கொண்டு லாபம் இவ்வளவு சதவிகிதம் என்று சொல்வது சரியல்ல. வாங்கிய இடத்திலிருந்து விற்கிற இடம் வரை பல விதமான இழப்பு வருகிறது. ஷார்ட்டேஜ், சிருங்கேஜ், வேஸ்டேஜ் வருகிறது. உதாரணத்திற்கு ஒரு வாதத்தை எடுத்துக் கூறினேன். ரூபாய் 42 ஒருகுவின்டாலுக்கு நாம் கொடுத்த நேரத்தில் கிலோ 80 பைசாவுக்கு விற்கப்பட்டது. இன்று ரூ. 89 முதல் ரூ. 100 வரை கொடுக்கிருேம். இரண்டையும் ஒரே விலையில் விற்கிருேம். இரண்டு மடங்கு விலை கூடியிருக்க வேண்டும். அன்று இருந்த நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இன்று இரண்டு மடங்கு விலைக்கு விற்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, அதற்குப் பின்னலே இந்த 4, 5 ஆண்டுகளில் ஒவ்வொரு மட்டத்திலும் விலையேறி இருக்கிறது. உதாரணத்திற்கு, டிரான்ஸ்போர்ட் சார்ஜஸ், பெட்ரோல்

போன்றவை விலையேறியிருக்கின்றன. நம்முடைய சிப்பந்திகளின் சம்பள விகிதம் அன்று இருந்ததை விட இன்று எப்படி ஏறி இருக்கிறது என்பதும் தெரியும். அதைப்போல் நம்முடைய நிர்வாகச் செலவும் ஏறியிருக்கிறது. லாபம் வருகிறது என்று அடிக்கடி சொல்லிய காரணத்தால், அதையும் ஆராய்ந்து பார்க்க ஒரு காஸ்ட் அகௌன்டென்ட் போட்டு இருக்கிறோம். அவர் பரிசீலித்து வருகிறார். அப்படித் தவறு இருக்குமானால் திருத்திக்கொள்கிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, in spite of the fact that there were serious discussions about the Nachiarkoil Temple and the levy procurement and in spite of the fact that the matter was referred to the Collector, why the serious action of closure of the Temple and the Orphanage on New Year's Day took place and who was responsible for it and why serious action could not be taken against the official who has wounded the feelings of the millions of people in Tamil Nadu?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, கோவில் நிர்வாகிகளைப் பொறுத்தவரையில், அவ்வளவு அவசரப்பட்டு இருக்க வேண்டியது இல்லை என்று எனக்குத் தோன்றுகிறது. நேற்று காலையில் நிகழ்ச்சி நடைபெற்று இருக்கிறது. கோவில் நிர்வாகிகளைப் பொறுத்த வரையில் ஏன் அந்த நிலையை எடுத்துக் கொண்டார்கள் என்று புரியவில்லை. அந்த கிராமத்திலே உள்ள சில பேர் நெல் கொடுத்து பூஜை நடத்த வாய்ப்பு வசதி செய்ய முன்வந்து இருக்கிறார்கள். அதையும் அங்கேயுள்ள டி. எஸ். ஓ.—ஒரு சாதாரண அலுவலர்—தடுப்பது நியாயம்தானா என்று கேட்டார்கள். எனக்குத் தெரிந்த வரையில், நிர்வாகிகளுக்கும் அங்கே கீழேயுள்ள அதிகாரிகளுக்கும் தகராறு இருப்பது போல் எனக்குப் புரிகிறது. ஆகவே, தான் அத்தகைய தவறு செய்து இருந்தால் நடவடிக்கை எடுப்பது நியாயம் என்று கருதுகிறேன். இதற்கிடையில், கோவில் அதிகாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவரைச் சென்று பார்த்து இருக்கலாம். டி. ஆர். ஓ. அவர்கள் உடனடியாக அந்த இடத்திற்குச் சென்று இருக்கிறார்கள். அவர்கள் இதற்கிடையில் இப்படிச் செய்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, மூலக் கேள்விக்கு விலையேற்றத்தைத் தடுக்க தக்க நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுப்பார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த மாதம் 1-ம் தேதி முதல் சென்னை போன்ற இடங்களில் காபி 40 பைசா என்று விலையேற்றப்பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட விலையைக் கட்டுப்படுத்த நம்முடைய அரசாங்கம் யாருக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்து இருக்கிறது? இப்படிப்பட்ட விலையேற்றத்தைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்தவிதமான அதிகாரமும் நமக்குக் கிடையாது. ஆகவே, எந்த அதிகாரிக்கும் நாம் எந்த உத்தரவும் போட முடியாது. அதைத்தான் ஏற்கனவே விளக்கினேன். உற்பத்தி ஸ்தானத்திலிருந்து விற்கிற விலையை நிர்ணயிக்க ஒரு சீரான பொருளாதாரக் கொள்கை உருவாக்கப்பட்டால் ஒழிய இந்த விலையேற்றத்தைத் தடுக்க முடியாது. இன்று சில பொருள்களின் விலையில் ஏற்றம் ஏற்பட்டு இருக்கிறது. சில நேரங்களில் விலை குறைகிறது. விவசாயிகளைப் பாதிக்கும் அளவுக்கும் விலை குறைகிறது.

திரு. என். கே. பழனிசாமி : அந்தக் கோவிலைச் சேர்ந்த நிலங்களில் 30 சதவிகிதம் பினுமி நிலங்களாக வைத்து குத்தகை விட்டு இருக்கிருர்கள். ஆகவே, அவர்கள் லெவி கொடுக்கவில்லை. அதை அறிந்து இப்படிச் செய்யப் போனதால் இந்த தகராறு ஏற்பட்டு இருக்கிறது. இப்படி சர்க்காருடைய நிலை இருந்தால் அது பத்தாம்பசலித் தனம் இல்லையா ? கோவிலை நிர்வாகத்தினர் இப்படிச் செய்வது பத்தாம்பசலித் தனம் இல்லையா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இங்கே கோவில் அதிகாரிகளைக் கைது செய்ய வேண்டும் என்று சொன்னதுதான் பத்தாம் பசலிக் கொள்கை.

Fair Price Shops.

*667 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state the number of fair price shops opened during 1974 in this State?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 1974-ம் ஆண்டில் 3539 நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டன. அவற்றில் 2498 கூட்டுறவுகளாலும் 230 தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷனுலும் நடத்தப்படுகின்றன.

திரு. என். கே. பழனிசாமி: 1974-ல் திறக்கப்பட்டிருக்கக் கூடிய இந்த ஃபேர்-பிரைஸ் ஷாப் போதுமான அளவுக்கு அரிசி கையிருப்பைக் கொண்டிருக்கிறதா? எவ்வளவு கையிருப்பு இருக்கிறது ? மத்திய சர்க்கார் ஏற்றுமதி செய்ய அனுமதி எவ்வளவுக்குக் கொடுத்து இருக்கிறது? மத்திய பூலில் இருந்து எவ்வளவு கொடுத்து இருக்கிருர்கள் ? இது எவ்வளவு நாட்களுக்குப் போதுமானதாக இருக்கும்.